॥ ஶ்ரீ: ॥

# க்ருத்திகா தீபம்

ஸ்ரீ உ வே நாட்டேரி கிடாம்பி ராஜகோபாலாசார்யர், ஆசிரியர்.

கார்த்திகை மாதத்தில் வரும் க்ருத்திகா தீபோத்ஸவம் பாஞ்சராத்ர ஆகமங்களிலும், வைகானஸ ஆகமங்களிலும், புராணங்களிலும், ஜ்யோதிஸ் ஶாஸ்த்ரங்களிலும் மிக விஶேஷமாக விதிக்கப் பட்டுள்ளது. இதில் பல விஷயங்களை ஆராய்ந்து நிர்ணயிக்க வேண்டியுள்ளதால் பல பெரியோர்கள் எல்லா ப்ரமாணங்களையும் ஆராய்ந்து நிர்ணயம் செய்துள்ளனர்.

ஸ்ரீமத் பெரியாண்டவனின் பல முக்ய ஶிஷ்யர்களுள் ஒருவரான மஹான் ஸ்ரீ சுண்டபாளையம் ராமபத்ராசார்யர் ஸ்வாமி தர்ம ஶாஸ்த்ர விஷயங்களில் கரை கண்டவராயிருந்தார். ஸகல ஶ்லாக்யராய் இருந்த இந்த மஹான் நம் ஆஶ்ரம ஸம்ப்ரதாயத்திற்கு பேருபகாரமாக அருளிய தர்மஶாஸ்த்ர நிர்ணயங்கள் பல. அவற்றுள் க்ருத்திகா தீபோத்ஸவ நிர்ணய: என்ற விஷயமும் ஒன்று. ஆன்ஹிக ஶேஷம் எனும் க்ரந்தத்தில் இவர் சாதித்துள்ள இது விஷயம் 17 பாராக்களைக் கொண்டது. இதை வருங்காலத்திற்கு உதவும் என தமிழாக்கம் செய்து 1986 அக்ஷய வர்ஷம் ஐப்பசி மாத ஸ்ரீ ரங்கநாதபாதுகா வில் நம் ப்ரக்ருதம் ஸ்ரீகார்யம் ஸ்வாமிஸலக்ஷண கநபாடி ஸ்ரீ உ வே வடுவூர் ஸ்ரீநிவாஸதேசிகாசார்யர் வெளியிட்டுள்ளார். இதை அப்படியே தருகிறேன்.

1. கார்த்திகை மாதத்தில் சதுர்தசியின் (கலா) வேதையற்ற பௌர்ணமி என்று உள்ளதோ அந்த தினம் தீபோத்ஸவத்திற்கு எடுத்துக் கொள்ளத் தக்கது.

2. மேற்படி தினத்தில் பரணீ (கலா) வேதையற்ற கார்த்திகையும் கூடியதாகில் அதுவே தீபோத்ஸவத்திற்கு முக்ய காலம்.

3. அந்த கார்த்திகைக்கு பரணீ ஸம்பந்தம் இருந்ததாகில் சுத்தமான (சதுர்தசீ வேதையற்ற) பௌர்ணமீயையும் விட்டு மறுதினமான கார்த்திகை தினமே எடுத்துக் கொள்ளத் தக்கது.

4. இவ்விதம் பௌர்ணமிக்கு சதுர்தசீ ஸம்பந்தம் இருந்து அன்றைய தினம் சுத்தமானது ( பரணீ ஸம்பந்தமில்லாத ) கார்த்திகை இருந்தாலும் அன்றைய தினத்தை விட்டு கலாமாத்ரம் சேஷமுள்ளதாயினும் மறுதினமே (பௌர்ணமியன்றே) தீபோத்ஸவம் கொண்டாடத் தக்கது.

5. முன் தின- பிந்திய தினங்களில் ஒரு தினத்தில் கார்த்திகைக்கு பரணீ வேதை - ஒரு தினத்தில் பௌர்ணமிக்கு சதுர்தசீ வேதை இப்படியிருந்தால், மாத ஆரம்பத்திலோ, மாதத்தின் பிற்பகுதியிலோ வேதையற்ற ( அதாவது பௌர்ணமிக்கு சதுர்தசீ வேதை, கார்த்திகைக்கு பரணீ வேதை ) கார்த்திகையையோ, பௌர்ணமியையோ உடைய தினத்தை எடுத்துக் கொள்ள வேண்டியது.

6. இப்படியாக முன்பும் பின்பும் வேதையற்ற தினம் கிடைக்காவிடில் அங்கி லோபத்தைக் காட்டிலும் அங்கத்தின் லோபம் தேவலை என்கிற ந்யாயப்படி சதுர்தசீ வேதை கொண்ட பர்வதினமே க்ராஹ்யம்.

7. இவ்விதம் ஸங்க்ரமணம், உபராகம் (மாதப் பிறப்பு, சந்த்ரக்ரஹணம்) இவைகள் ஸம்பவிக்குமாகில் மேற்படிகளால் துஷ்டமான தினத்தை விட்டு மாதத்தின் ஆரம்பத்திலோ மாதத்தின் முடிவிலோ உள்ள சுத்தமான பௌர்ணமியோ, கார்த்திகையோ க்ராஹ்யம்.

8. மாதத்தின் ஆரம்பத்திலும் மாதத்தின் முடிவிலுமே ( இரண்டிலுமே ) சுத்த தினம் கிடைக்கப் பெற்றதாகில், பின் தினமே ( மாதத்தின் பிற்பகுதியிலுள்ள தினமே) எடுத்துக் கொள்ளத் தகுந்தது.

9. மாத ஆரம்பம் மாதக் கடைசி இரண்டிலும்

உள்ள பர்வம், ஸங்க்ரமணம் உபராகம் இவைகளைக் கொண்டதாயினும் ஸம்பூர்ணமான பர்வாவைக் கொண்ட கார்த்திகை தினம் க்ராஹ்யம். ஸம்பூர்ணமான பர்வயோகம் கிடைக்கப் பெருவிடில் மறுதினமே க்ராஹ்யம்.

*10.* முன் தினத்திலோ மறு தினத்திலோ, மாதத்தின் ஆரம்பத்திலோ, மாத இறுதியிலோ, எப்பொழுதாவது மேற்படி பர்வம், கார்த்திகை இவைகளுக்கு செவ்வாய்க் கிழமை சேர்க்கையிருந்தால் அந்த தினத்தை விட்டு செவ்வாய்க் கிழமை சேர்க்கையற்ற சுத்தமான (வேதையற்ற) தினமே க்ராஹ்யம். அப்படி சுத்த தினம் கிடைக்கப் பெருவிடில் செவ்வாய்க் கிழமையுடன் கூடியதாயினும் ஏற்றுக் கொள்ளத் தக்கதே.

*11.* வேதையுள்ள தினம் ( சதுர்தசீ- பரணீ இவைகளுடன் கூடிய தினம் ), துஷ்டதினம் ( மாதப் பிறப்பு- க்ரஹணம்) இவைகளுக்குள் வேதையுள்ள தினத்தைக் காட்டிலும் துஷ்டதினம் க்ராஹ்யம்.

*12.* இங்கு தோஷம் என்பது அர்த்த ராத்ரிக்கு உட்பட்ட காலத்திற்குள் ஸம்பவிப்பது என்பது வ்யவஸ்தை . அர்த்த ராத்ரிக்குப் பிறகு ஏற்படுகிற ஸங்க்ரமணமோ க்ரஹணமோ தோஷத்திற்குக் காரணமாகாது.

*13.* மாதம் முதலிலோ, மாதத்தின் முடிவிலோ ஒன்றில் ரோஹிணியுடன் கூடிய வேதையற்ற சுத்த பர்வம், மற்றொன்றில் ப்ரதமையுடன் கூடிய வேதையற்ற சுத்தமான கார்த்திகை, இப்படியிருக்குமாகில் இரண்டும் ஸமபலம் கொண்டதாக இருப்பதால் பிந்திய தினமே க்ராஹ்யம். பிந்திய தினத்திற்கு ஸங்க்ரமணாதி தோஷம் இருந்தால் முந்தியதே க்ராஹ்யம்.

*14.* பர்வம் என்ன, கார்த்திகை என்ன இவைகளுக்கு வ்ருத்தியின் காரணமாக முன் தினத்திலும் சுத்தமான

அவைகளின் சேர்க்கை , மறு தினத்திலும் ஸ்வல்ப நாழிகை (விநடி) கொண்ட அவைகளின் சேர்க்கை இருக்குமாகில் , என்றைய தினத்தில் கார்த்திகை நக்ஷத்ரத்தின் யோகம் (சேர்க்கை) அதிகமாக வுள்ளதோ அந்த தினம் க்ராஹ்யம். ஸமமாகவோ , குறைவாகவோ இருந்தால் முந்திய தினம் க்ராஹ்யம்.

*15.* என்றைய தினம் தீபோத்ஸவம் கொண்டாடப் படுகிறதோ அன்றைய தினத்தில் ஸூர்ய அஸ்தமனத்திற்கு முன்பு முஹூர்த்த காலமும்(இரண்டு நாழிகையும்) அஸ்தமனத்திற்குப் பிறகு அரையாமமும்( மூன்றே முக்கால் நாழிகை) உத்ஸவ காலம்.

*16.* தீபோத்ஸவத்திற்கு வ்ருஷப லக்னத்தில்தான் உத்ஸவம் கொண்டாட வேண்டும் என்று விதிக்கப் பட்டிருப்பதால் , மாதத்தின் ( கார்த்திகை)ன் முற்பகுதியில் அஸ்தமித்து அரை நாழிகைக்குப் பிறகுதான் தீபோத்ஸவம் . மாதத்தின் நடுப் பகுதி , பிற்பகுதியாகில் அஸ்தமனத்திற்கு முந்தியே ஆரம்பிக்கலாம் என்பதாகக் கொள்ள வேண்டும்.

*17.* அஸ்தமனத்திற்கு முன்பு ஆகில் தீபோத்ஸவம் ஆன பிறகுதான் ஸந்த்யாவந்தனம் , ஔபாஸனம் . பின்பு ஆகில் அனுஷ்டானத்திற்குப் பிறகு தீபோத்ஸவம் .

இந்த கர வருடம் கார்த்திகை மாதம் *24* ஆம் தேதி அதாவது டிசம்பர் *10* ஆம் தேதி சனிக் கிழமை பௌர்ணமி *35* நாழிகை *49* விநாடிகள் உள்ளது. ரோஹிணீ *32*நாழிகை *52* விநாடி உள்ளது. அன்று பூர்ண சந்த்ர க்ரஹணம் சம்பவிக்கிறது. க்ரஹணம் ஆரம்பம் மாலை *6-14* க்கு. மத்யமம் இரவு *7-58*. மோக்ஷ ஆரம்பம் இரவு *8-28*. மோக்ஷம் இரவு *9.47* .

ஆகவே இவற்றை ஆராய்ந்ததில் , ஸ்ரீமத் பெரியாண்டவனின் திருவடியான ஸ்ரீ சுண்டபாளையம்

ராமபத்ராசார்யரின் மேற்படி 17 யோஜனைகளையும் மஹான்களின் துணையுடன் ஆராய்ந்ததில் , முக்யமாக 11 ஆம் யோஜனையையும் கவனித்ததில் க்ரஹண தினமாக இருந்தாலும் 10.12.2011 சனிக்கிழமை அன்றே திருக்கார்த்திகை பண்டிகை அனுஷ்டிக்க வேண்டும் என்று தேறிற்று.

அன்று க்ரஹண ஆரம்ப காலத்திற்கு மூன்று ஜாமம் முன் ஆஹாரத்தை முடித்துக் கொள்ள வேண்டும். அதாவது காலை 9 மணிக்குள் போஜனம்.

அன்று சாயம் சுமார் 5 மணிக்கெல்லாம் வ்ருஷப லக்னம் வந்து விடும். பிறகு சுமார் இரண்டு மணி காலம் வ்ருஷப லக்னம்தான். ஸூர்யாஸ்தமனம் மாலை 5-45க்கு . சூர்யாஸ்தமனத்திற்கு இரண்டு நாழிகை முன்பாகவே க்ருத்திகா தீபோத்ஸவத்திற்கு காலம் வந்து விடுகிறபடியால் (யதோசிதம் நீராடி) அன்று சாயம் 5 மணியிலிருந்து 6-14க்குள் வழக்கம் போல் பெருமாளுக்கு ஆராதனத்தில் பொரி சமர்ப்பித்து தீபம் சமர்ப்பித்து அகத்தில் எங்கும் விளக்கேற்றி உத்ஸவத்தை நடத்திக் கொள்ள வேண்டியது.

பின்னர் சந்த்ர க்ரஹண மோக்ஷாரம்பம் இரவு 8-28 க்கு என்றுள்ளதால் முன்னதாக க்ரஹண புண்யகால ஸ்நானம் செய்து 8-28 மேல், தர்ப்பணம் செய்யவேண்டியவர்கள், தர்ப்பணம் செய்யவேண்டியது. இரவு 9.47 க்கு மேல் யாவரும் க்ரஹண மோக்ஷ ஸ்நானம் செய்ய வேண்டும் . பின்னர் புஜிப்பது. சந்த்ரக்ரஹண தர்ப்பணத்திற்குப் பின் போஜன காலத்தில் பலாஹாரமா ? என்றுல் , பலாஹாரம் அவச்யமில்லை. ப்ரதமைதான் இருக்கிறது ஆதலால். (ப்ரக்ருதத்தில் பௌர்ணமீ பலாஹாரம் முதல் தினம் வெள்ளிக் கிழமையே ).

----★----

க்ருத்திகா தீபோத்ஸவம் எப்படி அனுஷ்டிப்பது என்றும் ஸ்ரீ சுண்டபாளையம் ராமபத்ராசார்யர் ஸ்வாமி சுருக்கமாகக் காட்டியுள்ளார். அதன் தமிழாக்கம் தரப் படுகிறது.

க்ருத்திகா தீபோத்ஸவ ஆராதன ப்ரயோகः

அன்று சாயம் காலம் முறைப் படி தீர்த்தமாடிவிட்டு பெருமாள் ஸன்னிதிக்குச் சென்று க்ருத்திகா தீபோத்ஸவாங்கம் பகவத் ஆராதநம் கரிஷ்யே என்று சங்கல்பித்து வழக்கம் போல் ஆராதனம் செய்து தூப தீபாதிகளால் அர்ச்சித்து பொரி முதலியவைகளை நிவேதனம் செய்து ஏழு வைஷ்ணவ மந்த்ரங்களாலும் விஷ்ணு காயத்ரியினாலும் தீபங்களை பெருமாளுக்கு சமர்ப்பிக்க வேண்டும். வழக்கம் இருந்தால் அப்போது - அக்நிர் நः பாது க்ருத்திகாः, நக்ஷத்ரம் தேவம் இந்த்ரியம், இதம் ஆஸாம் விசக்ஷணம், ஹவிராஸஞ்ஜுஹோதந, யஸ்ய பாந்தி ரஶ்மயோ யஸ்ய கேதவः,யஸ்யேமா விஶ்வா புவநாநி ஸர்வா, ஸ க்ருத்திகாபி ரபி ஸம்வஸாநः, அக்நிர் நோ தேவः ஸவிதா ததாது, என்று இந்த எட்டு வாக்யங்களால் அக்நிக்கு ஆத்மாவான பகவானுக்கு மஹாதீப நீராஜனம் சமர்ப்பிக்க வேண்டும். தாம்பூலாதிகளை சமர்ப்பித்து ஆராதனத்தை பூர்த்தி செய்வதாம்.

(மேற்கண்ட வாக்யங்களில் சில விளக்கங்கள். தீபோத்ஸவ ஆராதனத்தில் ஸ்நாநாஸநம் கிடையாது. அலங்காராஸனத்தில் மந்த்ர புஷ்பத்தோடு தீபத்தை சமர்ப்பிக்கலாம். போஜ்யாஸனத்தில் பொரி சமர்ப்பிக்கலாம். இதுவும் பெரியோர்கள் வழி. அல்லது இங்கு கண்டுள்ளவாறு போஜ்யாஸனத்தில் பொரி சமர்ப்பித்து புநர் மந்த்ராஸனத்தில் தீபம் சமர்ப்பிக்கலாம். ஏழு வைஷ்ணவ மந்த்ரங்களாவன- *விஷ்ணோ ரராடமஸி, விஷ்ணோः ப்ருஷ்டமஸி விஷ்ணோः ஶ்நப்த்ரேஸ்தோ விஷ்ணோஸ்ஸ்யூரஸி, விஷ்ணோர் த்ருவமஸி வைஷ்ணவமஸி விஷ்ணவே த்வா-)*